**இந்திய தூதரகம்**
**கோலாலம்பூர், மலேசியா**

## <u>செய்தி அறிக்கை</u>

## <u>2017-2018ஆம் ஆண்டிற்கான சுயநிதி திட்டத்தின் கீழ் கல்வி பயில இந்திய அரசாங்கம் அழைப்பு</u>

இந்தியாவில் அரசு கல்வி நிறுவனங்களில், 2017-2018ஆம் ஆண்டிற்கான சுயநிதி திட்டத்தின் கீழ் (Self Financing Scheme) பொறியியல், கட்டிடக்கலை மற்றும் மருந்தியல் துறையில் இளங்கலை கல்வி பயில விரும்பும் மலேசிய மாணவர்களுக்கு இந்திய அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான அட்டை வைத்திருப்பவர்கள் (PIO), வெளிநாட்டு இந்தியக் குடியுரிமை அட்டை கொண்டுள்ளவர்கள் (OCI), வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRIs) மற்றும் இந்திய நாட்டவர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியாது.

விண்ணப்பதாரர்கள், இந்தியாவில் எந்தவொரு மத்திய தேர்வையும் (central examination), முன் மருத்துவ சோதனையும் (Pre Medical Test) அல்லது வேறெந்தவொரு பொறியியல் தேர்வுக்கும் அமர வேண்டியதில்லை. கல்வி தகுதி அடிப்படையில் மட்டுமே தேர்வு செய்யப்படும்.

**<u>அடிப்படை தகுதிகள்:</u>**

1. <u>மருந்தியல் துறையில் இளங்கலை பட்டம் (B.Pharmacy)</u>

   இத்துறைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் இயற்பியல், வேதியல் மற்றும் உயிரியல் (தாவரவியல் மற்றும் விலங்கியல்) பாடங்களில் குறைந்த பட்சம் 60% மதிப்பெண்களையும்; ஆங்கில மதிப்பீட்டுச் சோதனையில் (இந்தியாவில் நடுவண் இடைநிலைக் கல்வி வாரியத்திற்கு [Central Board of Secondary Education] சமமான 10+2ஆம் வகுப்பு) 50% மதிப்பெண்களையும் பெற்றிருப்பது அவசியமாகும்.

2. <u>பொறியியல் / கட்டிடக்கலை துறையில் இளங்கலை பட்டம் (B.Engineering / B.Architecture)</u>

   இத்துறைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் இயற்பியல், வேதியல் மற்றும் கணிதப் பாடங்களில் குறைந்த பட்சம் 60% மதிப்பெண்களையும் ஆங்கில மதிப்பீட்டுச் சோதனையில் (இந்தியாவில் நடுவண் இடைநிலைக் கல்வி வாரியத்திற்கு [Central Board of Secondary Education] சமமான 10+2ஆம் வகுப்பு) 50% மதிப்பெண்களையும் பெற்றிருப்பது அவசியமாகும்.

## குறிப்பு

தேர்வு மதிப்பெண்கள் விழுக்காட்டில் மட்டுமே குறிப்பிட வேண்டும். 12ஆம் வகுப்பு தேர்வில் கிடைக்கப்பெறும் மதிப்பெண்களைக் கணக்கிடும்போது, 11ஆம் வகுப்பு தேர்வில் கிடைக்கும் மதிப்பெண்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. **தேர்வு மதிப்பெண்கள் சதவிகிதத்தில் குறிப்பிடவில்லை என்றால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இத்திட்டத்திற்கான விண்ணப்ப பாரம் www.indianhighcommission.com.my/sfs.html என்ற அகப்பக்கத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்; அல்லது கோலாலம்பூரிலுள்ள இந்திய தூதரகத்தின் கல்வி பிரிவிலும் (Education Wing) விண்ணப்ப பாரத்தைப் பெற்று கொள்ளலாம்.

விண்ணப்பம் செய்ய விரும்பும் மாணவர்கள், கீழ்கண்ட ஆவணங்களின் ***மூன்று (3)*** பிரதிகளை உடன் இணைக்க வேண்டும்:

(i) **இறுதி தகுதி தேர்வின் மதிப்பெண்கள்**

(ii) **கடப்பிதழ்**

(iii) **அடையாள அட்டை**

(iv) **பிறப்பு பத்திரம்**

(v) **ஆக கடைசியாகப் படித்த உயர்கல்வி கழகத்தின் அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட உறுதி கடிதம்**

(vi) **புதுடெல்லியிலுள்ள இந்திய பல்கலைக்கழகங்கள் கூட்டமைப்பின்** (AIU) **சமானம் சான்றிதழ்**

மேல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்தல் அவசியமாகும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட **விண்ணப்பங்களை** எதிர்வரும் **ஏப்ரல் 15, 2017ஆம்** தேதிக்குள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக வந்து சமர்ப்பிக்க வேண்டும்.

**The Education Wing,**

**High Commission of India,**
**Menara 1 Mon't Kiara,**
**Level 28, No. 1, Jalan Kiara,**
**Mon't Kiara, 50480 Kuala Lumpur**

தேர்வு செய்யப்பட்ட மாணவர்கள், விமான கட்டணம் உட்பட அனைத்து கல்வி செலவுகளையும் அவர்களே ஏற்று கொள்ள வேண்டும். கல்வியை முடித்த பிறகு மாணவர்கள் மலேசியாவிற்குத் திரும்ப வேண்டும் என உறுதி செய்ய வேண்டும். விண்ணப்பத்தாரர்கள் கல்லூரி/பல்கலைகழகங்களின் நடைமுறைகளுக்கு ஏற்ப, இணங்க வேண்டும்.

*****